# மேற்கத்தைய, இந்திய மெய்யியலில் அளவை முறைகளின் வகிபாகம்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**Kanesarajah K.**[1]


### ஆய்வுச் சுருக்கம்

உண்மை பற்றிய தேடலை தத்துவம் அல்லது மெய்யியல் என்பர். இத்தேடலானது மேலைத்தேயத்திலும் கீழைத்தேயத்திலும் இன்று வரை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலைத்தேய மற்றும் கீழைத்தேய மெய்யியல்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். மெய்யியல் ஆய்வு செய்கின்ற ஆளுகைப்புலத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், அழகியல், பௌதீகவதீதவியல் என வகுக்கமுடியும். இதில் அறிவாராய்ச்சியியல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அறிவாராய்ச்சியியல் என்பது அறிவு மூலங்கள் (Sources of Knowledge) மற்றும் அவற்றின் இயல்புகள், வலிதாம்தன்மை (Validity), அறிவின் வடிவங்கள், (Forms of Knowledge) அறிதலுக்குப்புலனாகும் பொருட்கள் (Objects of Cognition) அறியும் முறைகள் (Way of Knowledge) ஆகியவற்றினை விளக்கும் துறையாகும். இது அறிவின் வலிதாம் தன்மைக்கு (Validity of Knowledge) முக்கியத்துவம் கொடுக்கும். பொதுவாகவே எமக்குத் தெரியும் அறிவாராய்ச்சியியல் மிகவும் முக்கியமான ஒரு துறை. “தத்துவமும் அறிவாராய்ச்சியியலும் ஒன்றைச் சார்ந்து மற்றொன்று அமைவதுடன் மெய்யறிவுத் தேட்டத்தின் ஒன்றைத் தவிர்த்து மற்றொன்று செயற்படாது என்பர்”. அறிதல் முறைகளை விளக்குவது அறிவாராய்ச்சியியல் என்றும் உள்ளதன் முறைகளை விளக்குவது தத்துவம் என்றும் W.P. மாண்டேகு குறிப்பிட்டார். கீழைத்தேய அறிதல் முறைகள் மேலைத்தேய அறிதல் முறையை விட மிகவும் பரந்ததும், பருப்பொருள் சார்ந்ததாகவும் உள்ளது என்பதை சான்றுகளுடன் எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் முதன்மை நோக்காக அமைகிறது. அறிதல் முறைகள் மேலைத்தேய சிந்தனையிலும் கீழைத்தேய சிந்தனையிலும் ஒரே மாதிரியாக உள்ளனவா? என்பதையே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொண்டு, மேலும் மேலைத்தேய மெய்யியல் முறைகளை விட கீழைத்தேய மெய்யியல் அறிதல் முறைகள் வேறுபாடாக உள்ளது என்பதை கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றிருக்கிறது. இதற்காக விபரிப்பு முறையும் விளக்க முறையும் ஒப்பீட்டு முறையும் விபரண முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.


**பிரதான சொற்கள்:** அளவைகள், மேலைத்தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல், வலிதான அறிவு

To whom correspondence should be addressed: drkanesraj@gmail.com

[1] Senior Lecturer, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.